

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப்பள்ளிகளில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class room ) அமைக்கும் திட்டத்தை நிறைவு செய்யும் வகையில் Smart Class room அமைக்கும் பணியினை நிறைவு செய்தார் . ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா ஆர்த்தி உள்ளார்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி கருங்கல்பாளையம் பகுதி 38, 39வது வார்டுகளில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், கழக விவசாய அணி இணைச் செயலாளர் குறிஞ்சி என்.சிவகுமார், பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் விவேக், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சீனிவாசன், இமயம் சிவக்குமார், கொமக கோவிந்தசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

### குண்டாமணி(எ) என்.செல்வராஜ் தலைமை!

# மயிலாடுதுறையில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நிவேதா எம்.முருகன், நாத்திகம் நாகராசன், பொள்ளாச்சி சித்திக் சிறப்புரை! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜன. 28 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொது கூட்டம் மயிலாடுதுறை சின்ன கடைத்தெருவில் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் தலைமை தாங்கினார்.

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், பி.முருகமணி, செல்ல சேது.ரவிக்குமார், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த. விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார், மலர்விழிதிருமாவளவன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எம்.சம்சுதீன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, மயிலாடுதுறை நகர்மன்ற துணைத் தலைவர் எஸ்.எஸ்.குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கிருத்திகாஇளங்கோவன், ஆர்.ராகுல்வர்மா, டி.முத்துகுமார், ஆர்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பிற்ப டுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் நாத்திகம் நாகராஜன், மயிலாடுதுறை சின்ன மாரியப்பன் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியவீலன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், அரசு. வழக்கறிஞர் இராம.சேயோன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவாதாஸ், எஸ்.சங்கரநாராயணன், நத்தம் ஏ.வின்சென்ட், அ.காந்தி, ஹர்சத், பி.கென்னடி, ஜெ.கபிலன், வைத்திஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், சுபா.நெடுஞ்செழியன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.முருகன், இரா.மனோகரன், சாந்திஇராமலிங்கம், திபாசத்தியேந்திரன், ஆர்.செல்வராஜ், வி.எஸ்.பிரபாகர், இரா.முருகப்பா, கே.விக்னேஷ், எஸ்.எம்.சம்சுதீன், அறிவு (எ) க.அறிவுச்செல்வன், வி.சௌமியன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், எம்.எஸ்.முத்து குபேரன், பெரு.வீரமணி, காளி.தேசப்பன், எஸ்.பாலாஜி, இரா.காழிகலைவாணன், வெடி எஸ்.பாலமுருகன், ஆர்.தன்ராஜ், மா.வைத்தியநாதன், மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் உமா மகேஷ்வரிசங்கர், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், காமாட்சிமூர்த்தி, கே.மகேந்திரன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணசங்கரி குமரவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.ஜுபையர்அகமது, எம்.எஸ்.விஜய், சௌ.சர்வோதயன், வினோத்பாண்டியன், எஸ்.ஆனந்தன், கோசி.மதி.திருவாளவன், நகர நிர்வாகிகள் ஆர்.நடராஜன், மலைக்கோயில் எம்.பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம், எம்.குமார், மேனகாமாரியப்பன், முன்னாள் ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் டி.சந்தோஷ் நன்றி கூறினார்.

# பஞ்சாப் - அரியானா மாநிலங்களில் டிராக்டர் பேரணி!

சண்டிகர், ஜன.28-

வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை சட்டபூர்வமாக்குவது உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஆண்டு முதல் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே போராட்டத்தை தீவிரப்படுத்தும் விதமாக குடியரசு தினத்தன்று டிராக்டர் பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என்று விவசாய சங்க தலைவர் சர்வான் சிங் பாந்தர் அறிவித்தார். அதன்படி, பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் நடைபெற்ற போராட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட டிராக்டர்களுடன் விவசாயிகள் கலந்து கொண்டனர். அம்மாநிலங்களில் உள்ள பா.ஜ.க. அலுவலகங்கள், வணிக வளாகங்கள் முன்பு டிராக்டர்கள் நிறுத்தி வைக்கப்படும் என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.


